**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பண்பாட்டின் இரு கூறுகள் யாவை?
2. தமிழில் ஆடை குறித்து வரும் பழமொழி ஒன்றினை எழுதுக.
3. வெள்ளை நிறத்தை எதன் அடையாளமாகச் சீனர்கள் பயன்படுத்துகின்றனர்?
4. உலகம் இன்று சிறு கிராமமாகச் சுருங்கியதன் காரணம் என்ன?
5. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் பெயர் என்ன?
6. தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டியவர் யார்?
7. கழுமலம் என்று பழமொழி நானூறு குறிப்பிடும் ஊர் எது?
8. தமிழ்நாட்டில் சமண சமயத்தைப் பரப்பியவர் யார்?
9. நாயக்கர் என்ற சொல்லின் பொருள் என்ன?
10. ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைப் பற்றிப் பாடும் சிற்றிலக்கியம் எது?
11. இடங்கைப் பிரிவிலுள்ள சாதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?
12. தன்னை ஒரு தமிழ் மாணவன் என்று சொல்வதில் மகிழ்ச்சி அடைந்த ஐரோப்பியர் யார்?
13. குணவீரப் பண்டிதர் எழுதிய இலக்கண நூல்கள் யாவை?
14. மடாதிபதி என்று அழைக்கப்படுபவர் யார்?

15. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனக் கூறியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. பண்பாட்டின் வகைகளை எழுதுக.
2. உண்ணும் முறையில் வெளிப்படும் பண்பாடுகளை விவரிக்க.
3. ஓவியச் செய்தி – குறிப்பு வரைக.
4. கள் குடிப்பதால் வரும் தீங்குகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக.
5. பௌத்த நெறிகளைப் புலப்படுத்துக.
6. ஐரோப்பியரின் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் யாவர்?
7. காசின் பயன்களைக் கூறுக.
8. தீப்பாய்ந்து இறந்த பெண்ணரசிகள் பற்றிய செய்திகளை விவரிக்க.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) பண்பாட்டின் வகைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பண்பாட்டு வாயில்கள் வெளிப்படுத்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

2. (அ) சிற்பக்கலை வளர்த்த பண்பாட்டு முறைகள் குறித்துக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

(அல்லது)

(ஆ) மதுரை நாயக்கர்களின் ஆட்சித் திறத்தை விவரிக்க.

3. (அ) உரையாசிரியர்கள் மற்றும் புலவர்கள் குறித்துக் கல்வெட்டுக் கூறும் செய்திகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பழங்காலத்தில் ஏற்பட்ட வழக்குகளும் அவற்றிற்கு விதித்த வரிகளும் பற்றிக் கட்டுரை எழுதுக.

* * *